**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 158/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | சந்தியா |
| Husband Name / Father's Name | சிலுவைமணி |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of November 2018.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். நான் சர்ச்சில் பாதிரியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

கடந்த 25.02.2009ம் தேதி 22.30 மணிக்கு மூன்றடைப்பு காவல்துறையினர் இந்த வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது அதில் தாங்களும் இசக்கி கோனார் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு தற்போது எதிரியுடன் சேர்ந்து வழக்கில் பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous — CC.No. 158/2009
Preliminary register
Sessions

Deposition Of Witness for — Prosecution PW 7
Defense
Court

Name — முருகன்
Husband Name / Father's Name — ராமசாமி
Village
Taluk
Religion
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26th day of November 2018.

நான் தற்போது காவல்துறையில் பணிபுரிந்து பணிமூப்பு அடைந்துவிட்டேன். இந்த வழக்கு சம்பவத்தின் போது மூன்றடைப்பு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 25.02.2009ம் தேதி 21.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது மருதகுளம் பிள்ளையார்கோவில் தெரு இசக்கி என்பவரது மனைவி இசக்கியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்த புகார் மனுவினை பெற்று காவல்நிலைய குற்ற எண்.22/2009 இதச சட்டப்பிரிவுகள் 452, 294(பி), 323, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். பின்னர் இசக்கியம்மாளை விசாரணை செய்தேன். பின்னர் விசாரணைக்காக வழக்கின் கோப்புக்களை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

புகார் கொடுக்க அ.சா.1ம் அவரது மனைவியும் வந்தார்கள். புகார் கொடுக்கும்போது காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் இருந்தார்கள். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. புகார் வாக்குமூலத்தில் புகார்தாரர் கையொப்பத்திற்கு அருகில் அவர் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் கையெழுத்து மட்டும் தான் இருந்தது என்றும், நீங்கள் தான் புகாரை தயாரித்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும் வாதி வீட்டிற்கும் இடையே 5, 6 கிலோமீட்டர் இருக்கும்.